***கவனிக்க.*- *2018.11.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2097 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

*2097 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1910 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### *2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு*

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது இறுதிக்கிரியை மற்றும் தனியார் இறுதிக்கிரியை பூமி பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தில் (1) கீழ் செய்யப்படும் அறிவித்தல் -2018*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் II ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பொது இறுதிக் கிரியை மற்றும் தனியார் இறுதிக் கிரியை பூமி பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தில் 5(1) ஆம் பிரிவினால் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சராகிய தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி ஆகிய என்னால், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதிக் கிரியைக்காக பிணங்களை புதைப்பதற்காக அல்லது எரிப்பதற்காக பொது இறுதிக் கிரியைக்கு பயன்படுத்தப்படும் இடமாக இத்தால்அறிவிக்கப்படுகின்றது.*

தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி,
வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி,
திட்டமிடல், பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சி மன்றமும், மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு,
கல்வி சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல்,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்,
வடமேல் மாகாணம்.

முதலமைச்சு அலுவலகம்,
குருநாகல்,
*2018*, ஒற்றோபர் *05*.

### அட்டவணை

*வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹிரியால ஹத்பத்துவையில், இஹல விசிதெகே கோரளையில், பஹல வல்பொவில் அமைந்துள்ள நெல் லாஸ் பதினொரு பரப்பளவினைக் கொண்ட கெமன்பொல வயல் மற்றும் அதற்கு அண்மித்துள்ள குரக்கன் லாஸ் மூன்று பரப்பினைக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் ஓ. ஜீ. நிமல்சிறி அவர்களினால் அளந்து ஒழுங்கமைத்து சான்றுப்படுத்தப்பட்ட 5778 ஆம் இலக்கமுடையதும் 2017.12.31 ஆந் திகதிய திட்டத்தின்படி, துண்டு இலக்கம் 01 க்கான (00. ஏக்., 00றூ., 19.0 பே. ) 0.0480 ஹெக்டயார் விஸ்தீரணமான “ அம்பகொடுவில் பில்லேவ” என்னும், வடக்கு : அப்புநைதவிற்கு மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் வயலின் வரம்பு; கிழக்கு : நெல் நிலத்தின் வரம்பு; தெற்கு : செல்லப்பு மற்றும் சிலர் உரிமை கோரும் கெமன்பொல வயலின் வரம்பு; மேற்கு : கெந்தவல நைதெலாகே மெணிக் எதனா மற்றும் சிலர் உரிமை கோரும் அம்பகொடுவ வயலின் வரம்பு, என்பவற்றை எல்லைகளாகக் கொண்ட நிலம் மற்றும் சேற்று நில காணிகளினால் பிரிக்கப்படாத நெல் லாஸ் மூன்று (3) பரப்பளவினைக் கொண்டுள்ள பில்லேவ மாத்திரம் கல்லறையினைக் கொண்ட காணி.*

*11-308*

**மேல் மாகாண மாகாண சபை**

*2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் சந்தைகள், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத வியாபார நிறுவனங்களின் வியாபாரப் பெயர் பிரமாணத்தின் (22) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் சந்தைகள், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத வியாபார நிறுவனங்களின் வியாபாரப் பெயர் பிரமாணத்தின் (22) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே விபரங்கள் குறிப்பிடும் வியாபாரப் பெயரின் பதிவினை, மேல் மாகாணத்தின் வியாபாரப் பெயர் பதிவாளர் சௌரத் ஆரச்சிகே லக்சிதா ரங்கனீ ஆகிய நான், முடிவுறுத்துகிறேன் என இத்தால் அறிவிக்கிறேன்.*

*வியாபாரத்தின் பெயர் : மஹஜன பொத்ஹல;*
*வியாபாரத்தின் விலாசம் : இல. 141, கண்டி வீதி, கடவத்தை;*
*பதிவு செய்யப்பட்ட திகதி : 2016.08.08;*
*பதிவு இல. : டபிள்யூபி 15274.*

*சௌரத் ஆரச்சிகே லக்சிதா ரங்கனீ*
*மேல் மாகாணத்தின் வியாபாரப் பெயர் பதிவாளர்.*

*மாகாண வியாபாரப் பெயர் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 512, நாவல வீதி, ராஜகிரிய,*
*2018, ஒற்றோபர் 10.*

*11-400*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*